
கடற்பாலம்
பாலகுமாரன்

அண்ணல் கரம் கூப்பினான். குரங்கு கை கட்டி வானம் பார்த்தது.

நண்பர்க்கு என்ன வேதனை...? மிருதுவாய்க் கேட்டான். குரங்கு பதில் சொல்லாது எங்கோ வெறித்தது.

எல்லா கடின உழைப்புக்கும் பரிசு உண்டு. ஏன் கலக்கம்? எப்போது பரிசு என்பதே நண்பர் கேள்வி இல்லையா... பரிசற்று எந்த நல்ல விஷயமும் போவதில்லை நண்பரே.

குரங்கு ஆத்திரத்தில் பல் கடித்தது. யாருக்கு வேண்டும் உன் பரிசு?

பிறகு என்ன வேதனை நண்பருக்கு?

உன் மனைவியை நீ பிரிந்தது மட்டும்தான் விஷயமா? மற்றவர் வேதனையை நீ அறிவதுண்டா? எனக்கும் மனைவி உண்டு. பிள்ளைகள் கூட உண்டு. சகலமும் பிரிந்து இந்தக் கடல் மணல் உச்சி வெயிலில் எனக்கென்ன தலையெழுத்து? கிறீச்சிட்டது.

புரிகிறது, நண்பர் தன் இல்லம் போகலாம். உங்கள் மனைவிக்கு என் அன்பைச் சொல்லுங்கள். குழந்தைகளுக்கு என் ஆசிகள்.

எனக்கு மட்டும்தானா மனைவியும், குழந்தைகளும்? அங்கே ஆயிரக்கணக்கானவர்.... கடல் நோக்கி குரங்கு கை நீட்டிற்று.

அவர்கள் மனைவியர் பற்றி உங்களுக்கு என்ன கவலை? உங்கள் வேதனை உங்கள் மனைவியின் பிரிவு குறித்து மட்டும்தான் அல்லவா? பிறர் மனைவி பற்றியும் கவலை உண்டா?

அவர்கள் என் தோழர்கள்.

அவர்கள் சகலருக்கும் தோழர்கள். நல்லவர்க்கு உதவி செய்பவர்கள்.

நீ யார்? நீ யார்? உனக்கும் எங்களுக்கும் என்ன சம்பந்தம்? எனக்கு மட்டும் விடுதலை வழங்க உன்னை அனுமதித்தது யார்? குரங்கு ஆத்திரத்தில் அலறிற்று.

உங்கள் தைரியத்துக்கு உங்களுக்குக் கிடைத்த பரிசு இது. உலகில் சகல விஷயத்திற்கும் பரிசு உண்டு. எந்தப் பரிசை, எவ்விதமான பரிசை நாம் பூரணமாய் அனுபவிக்க முடியும் என்று ஆராய்வதும் நல்லது.

நானும் உங்களைப் போலவே ஒரு கிரஹஸ்தன். உலகில் கூடி வாழாத உயிரினம் உண்டா? நிறமும் உருவமும் சற்று

மாறுபட்டிருக்கலாம். உணவும், நீரும், காற்றும், வசிக்கும் இடமும் சற்று வித்தியாசப்படலாம். அதன் பொருட்டு நம்மிலும் சில மாறுதல்கள் இருக்கலாம்.

வம்ச விருத்தியின் பொருட்டு இணைதேடலும் கூட்டமாய்க் கூடி வாழ்தலும் நம் அனைவர்க்கும் பொது. இப்புவியில் சகல உயிரினத்திற்கும் உண்டான விதி.

அதனால் என்ன சொல்ல வருகிறாய் நீ?

உன் துக்கமும் என் துக்கமும் பொது. உன் மகிழ்வும் என் சந்தோஷமும் ஒன்று.

என் மனைவியை ஒருவன் தூக்கிக் கொண்டு போனால் நீ படையெடுத்து வருவாயா...?

நிச்சயம் வருவேன். அவஸ்யமானால் தவறிழைத்தவனை மறைந்தும் கொல்லுவேன். அண்ணல் உள்நோக்கம் புரிந்து கொண்டு பதில் சொன்னான்.

ஹ... நீ சுயநலக்காரன். உன் காரியம் முடிந்ததும் வெறும் நன்றி சொல்லி விட்டு உன் ஊருக்குப் போகிறவன்.

இது என் காரியம் மட்டுமில்லை. உன் காரியமும் கூட. உலகில் வம்ச விருத்தியே தலையாய காரியம். இதன் பொருட்டே நீ ஆணாய் இருப்பதும், உன் மனைவி பெண்ணாய் இருப்பதும். இந்த விருத்தி கருணையின்றி நடைபெறுதல் தகாது.

உன் குழந்தை, உன் மனைவி என்கிறபோது நெஞ்சில் வரும் பாசம், நெகிழ்ச்சி உன் வம்சத்தை வலிமையாக்குகிறது. வீரியம் கொள்ள வைக்கிறது. வளர்ச்சி ஏதுவாகிறது.

எவர் பெற்றதோ என்கிற நிலை வளர்ச்சிக்கு எதிரி. இதனால்தான் மாற்றான் மனைவியிடம் நாம் தள்ளி நின்று பேசுகிறோம். இதில் ஒழுங்கீனம் வரக்கூடாது என்று தவிக்கிறோம்.

நல்ல சட்டங்கள் நாளைய தலைமுறையின் வலுவை முன்னிட்டு. இந்த உலகின் தொடர்பு சங்கிலி அறுந்திடக்கூடாது என்கிற கருணையின் பொருட்டு.

உன் வேதாந்தங்கள் எனக்கு அவஸ்யமில்லை.

ஒரு அவஸ்யத்தைப் புரிந்து கொள்ளுங்கள் நண்பரே. நீங்கள் மட்டும் வீடு திரும்ப, இங்குள்ளவர்கள் தங்கள் மனைவிமார் மீது சந்தேகம் கொள்ளலாம். அது உங்கள் மனைவி மீது, உங்கள் மீது வெறுப்பாய்த் திரும்பலாம். உங்கள் இருப்பிட அமைதி குலைந்து விடும்.

என்ன சொல்கிறாய் நீ?

ஒழுங்கீனத்தை ஒட்டு மொத்தமாய் எதிர்ப்பது நல்லது. மாட்டேன் என்று மறுத்தல் அதற்குத் துணைபோவது போல ஆகும்.

உங்களைச் சிறை செய்துவிட்டு உங்கள் நண்பர் நால்வரை ஊருக்கு அனுப்புகிறேன். அப்போது உங்கள் அருமை மனைவியின் ஒழுக்கத்தைப் பற்றியும் யோசிக்குமில்லையா?

இது என் காரியம் மட்டுமில்லை. ஒரு ஒழுங்கீனத்தை எதிர்த்து உயிரினப் பாதுகாப்பை முன்னிட்டும் செய்யும் காரியம்.

குரங்கு திகைத்தது. தீவிரமாய் யோசித்தது.